முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1639

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.03.2024, திங்கட்கிழமை

1. தர்ம ஞானியே அரங்கா வாழ்க
தவபலமிக்க தேசிகா வாழ்க
வருங்காலம் ஞானலோகமாக
வையகமே ஞான ஆட்சிப்பெற
2. ஆட்சிப்பெற அவதாரம் எடுத்து
அகிலமெங்கும் தொண்டர்படை பெருக்கி
மாட்சிமை நிகழ்த்துகின்ற குருராஜனே
மகானே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. ஞானமுடன் விளம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 12 ம் நாள், 25.03.2024, திங்கட்கிழமை)
நாடெங்கிலும் அரங்கன் தர்மம்
தர்மமதும் வளர்ந்து கலியுகத்தில்
தவதர்மலோகமாக இந்த உலகம் பெருமாற்றம் கொண்டுவர
4. வருகவே உலகோர் ஞானவழியாம்
வடிவேலன் என் சரவணச்சுடர் வழி அருளுகின்ற
ஆறுமுக அரங்கன் ஞானக்கொள்கையை
ஆற்றல்பட ஏற்று உலகோர் சேவையாற்றி உன்னதம்பட
5. உயர் ஞானி அரங்கனே என்று உணர்ந்து தெளிந்து
உலகத்தில் ஆன்மீகம் பயின்று இனிதே
வகைபட அரங்கன் சொல்லுகின்ற
வார்த்தைகள் அத்தனையும் வேதமென நம்பி
6. வல்லமைபட உலகோர் ஞான வழிக்குவந்து
வையகத்தில் அற்புதம் படைப்பர்
ஆகவே அரங்கன் வடிவமைத்த ஓங்காரக்குடில்
அகிலத்தை மாற்றும் ஞானசபை

7. வகை பட வரம் பெற வையகத்தார்
குடில் நோக்கி வந்தால் போதும்
வளர்ச்சியும் மாற்றமும் இந்த
லோகம் சடுதி கண்டு

8. தளர்வில்லாத மக்களைக் காக்கின்ற
தர்ம ஞான தவபலம் மிக்கோர் ஞானபதவிக்கு வந்து இனிதே
ஞான ஆட்சியாக உலகம் மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–